தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகம்- 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் மற்றும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்தல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து நிலைத்திருந்தல் தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதாக என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிறுவகம் செயற்பட்டுள்ளதாக,
- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்தவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 10 பிரகாரம் வட்டி வருமானங்களை நிலையத்திற்கு நிச்சயித்து பெற்றுக்கொள்ளக் கூடிய வருமானத்தின் மீது மற்றும் பயனுள்ள வட்டி வீதாசாரம் மீது | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் இலக்கம் 09 இன் படி கணக்கில் இடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

இனங்காண வேண்டியுள்ள போதிலும் நிலையத்தினால் ஊழியர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த இடர் கடன் பணத்திற்கு அறவிடும் வட்டி வருமானத்திற்கு நேரொத்த, அக்கடன் பணத் தொகையினை வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருந்தால் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த வட்டி வருமானத்திற்கிடையின் வேறுபாடான ரூபா 108,485 நிலையில்லா கிரயமாக நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானம் மற்றும் செலவினத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| வட் வரி மீதி | 35,086,223 | மீதி உறுதிப்படுத்தல் | வட் வரி மீதி தொடர்பாக கணக்காய்வு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்டிருப்பதனால் அக்கணக்காய்வு முடிவுறும் வரை அதற்கான மீதிகளினை உறுதிப்படுத்துவதழன முன்வைப்பதற்கு இயலாதுள்ளமையினை அறியக் கொடுக்கப்பட்டுள்ளது. | கணக்காய்விற்கான சகல தகவல்களும் முன்வைக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்தவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வு வருடம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியுள்ள கணக்கு மீதிகள் 22 மொத்தப் பெறுமதி ரூபா 5,016,888 ஆக இருந்ததுடன் அதனுள் 01 வருடம் முதல் கொண்டு 05 வருடம் இடையிலான காலவீச்சிலிருந்து தொடர்ந்து வரும் மொத்தம் ரூபா 70,241 | சம்பந்தப்பட்ட தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத் தரப்பட்டுள்ளது. | பெற வேண்டிய சகல தொகையினையும் அறவிடப்பட வேண்டும். |

மற்றும் 5 வருட காலத்திற்கு மேல் தொடர்ந்து வரும் அறவிடப்பட முடியாதிருந்த நிலுவைகளின் பெறுமானம் ரூபா 1,209,780 ஆகும்.

### 1.6.2 செலுத்த வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்தவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 45 வைப்பு மீதிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 17,303,469 ஆக இருந்ததுடன் அதனுள் 02 வருடம் முதற்கொண்டு 05 வருடம் இடையேயான காலவீச்சிலிருந்து தொடர்ந்துவரும் 18 நிலுவைகளின் மொத்தத் தொகை ரூப 2,963,375 மற்றும் 05 வருடங்கள் கழிந்துள்ள ரூபா 13,145,565 ஆன 04 வைப்பு மீதிகளும் இருந்ததுடன் அவை தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 05 வருடங்கள் கழிந்துள்ள வைப்புக்களினுள் உள்ள CECB நிலையத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 13,115,815 ஆன தடுப்பு பணத்திற்கு தேவையான நிதியத்தினை பெற்றுக்கொண்டு விடுவிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் விடுவிப்பதற்குள்ள ஏனைய மீதிகள் தொடர்பாக இதனகத்திற்கு பின்னர் நடவடிக்கை எடுப்பதாகவும் அறியத் தரப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே அவதானிக்கப்பட்டன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2001 இன் 1 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு (கூட்டமைக்கப்படும்) சட்டமூலத்தின் 4 ஆவது பிரிவு | நிலையத்தின் குறிக்கோள்களான கூட்டுறவு அபிவிரத்திக்கான செயற்பாடுகளினை மேம்படுத்தல் மற்றும் இணைப்பீடு செய்தல், நவீன தொழில்நுட்ப முறைமைகள் மூலம் பயிற்சியினை வழங்கல் கூட்டுறவு அபிவிருத்திக்கான பரிசோதனைகளினை மேம்படுத்தல், திறனினை | 2001 இன் 1 ஆம் இலக்க தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிலையம் (கூட்டமைக்கப்பட்ட) சட்டமூலத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் நிலையத்தின் குறிக்கோள்களான கூட்டுறவு அபிவிருத்திக்கான செயற்பாடுகளை மேம்படுத்துதல் மற்றும் இணைப்பீடு செய்தல், திறனினை தேவைப்பாடு | நிலையத்தின் குறிக்கோள் களினை நிறைவேற்றும் படியான திட்டங்கள் வகுக்கப்பட்டு செயற்படுத்தப் பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தேவைப்பாடு கொண்ட கூட்டுறவினை முகாமைப்படுத்தப்படுதல், தொழில்துறை சம்பந்தமான ஆலோசனை வழங்கல் மற்றும் மாதிரி கூட்டுறவு கிராமங்கள் மற்றும் வியாபார மத்திய நிலையங்கள் தாபித்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | கொண்ட கூட்டுறவினை முகாமைப்படுத்தல் தொழில்சார் ஆலோசனை வழங்கல் ஆகிய அலுவல்களுக்காக கோடு அமைச்சினது ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் படி தொண்டர் அடிப்படையில் கூட்டுறவுத் துறையின் மற்றும் முகாமைத்துவம், தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலுள்ள நிபுணர்கள் ஈடுபடுத்தப்பட்டு முகாமைத்துவ தேவைப்பாடுள்ள கூட்டுறவு சங்கள் மாகாண ரீதியாக தெரிவு செய்யப்பட்டு ஆலோசனை தொழில்நுட்ப சேவைகளினை வழங்குவதற்கான திட்டமொன்று செயற்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | சம்பந்தப்பட்ட விடயத்திற்கான உப கட்டுநிதியினை அதற்கான அலுவல் முடிவுற்றதும் தீர்க்கப்பட வேண்டியுள்ள போதிலும் 16 சந்தர்ப்பங்களில் 06 உத்தியோகத்தர்களுக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 340,058 சம்பந்தப்பட்ட காரியத்திற்கான உப கட்டுநிதியினை 13 நாள் முதற்கொண்டு 70 நாள் வரையிலான காலம் தாழ்த்தப்பட்டு தீர்க்கப்பட்டிருந்தது. | கணக்குப் பிரிவில் கணக்கிடுவதில் தாமதம் நேர்ந்துள்ளது. | நிதிப்பிரமாணப் படி செயற்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

-----------------------

**2.1 நிதி விளைவு**

-----------------------

மீளாய்வாண்டில் செயற்பாட்டு விளைவு ரூபா 941,564 குறைபாடு இருந்ததுடன் அதற்கு நேரொத்த சென்ற வருட குறைபாடு ரூபா 10,237,824 ஆனது. அதன்படி நிதி விளைவில் ரூபா 9,296,260 வளர்ச்சி அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் செலவினத்திற்கான கொடை பெறுவனவுகள் ரூபா 15,459,445 அதிகரிப்பே பிரதானமாக இவ்வளர்ச்சிக்கு காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்தவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளக வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் மூலம் 2015 பெப்ரவரி 19 ஆந் திகதி மற்றும் 2020 பெப்ரவரி 11 ஆந் திகதி நிலையத்திற்கு தற்காலிகமாக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள முறையே ரூபா 2,000,000 பெறுமதியான மோட்டார் வண்டி மற்றும் ரூபா 8,000,000 பெறுமதி வாய்ந்த ஜீப் வண்டியினை கையெற்கப்பட்டில்லாததுடன் அவற்றினை பழுதுபார்க்கும் செலவினமாக 02 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா 417,481 செலவிடப்பட்டிருந்தது. | துரிதமாக கையேற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதாக அறியத் தரப்பட்டுள்ளது. | வாகனங்களினை கையேற்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ரூபா 60,000 மாதாந்த வாடகைக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த, நிலையத்திற்குச் சொந்தமான பல்வகை அலுவலுக்கான கட்டிடத்தின் கீழ் தளத்தினை 2018 மார்ச் 23 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை வாடகைக்கு கொடுப்பதற்கு மேற்கொள்ளப்படாமையின் காரணமாக அக்கட்டிடத்தின் மீது மாடி வீணடிக்கப்பட்டிருந்ததுடன் இந்த பல்வகை அலுவலுக்கான கட்டிடத்தின் களணி ஆய்வுகூடங்கள் உட்பட ரூபா 6,020,415 ஆன பொருட் கூறுகள் 462 ஒரு வருடத்திற்கும் மேலாக வீணடிக்கப்பட்டுள்ளன. | தற்போதைக்கு அது கண்டி பல நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு வியாபார அலுவலுக்காக 05 வருட காலத்திற்கு குத்தகைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளமையினை அறியத் தரப்பட்டுள்ளது. | நிலையத்திற்குரிய சொத்துக்கள், வருமானம் ஈட்டுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2014 வருடத்தில் ரூபா 369,116,705 செலவிடப்பட்டு | கொவிட் தொற்றுநோய் நிலைமையினால் | சொத்துக்கள் பயன்தரும் |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கப்பட்டிருந்த மஹிந்த ராஜபக்ச அரங்கினை திட்டமிடுவதில் மற்றும் நிர்மாணிப்பதில் இருந்த குறைகள் காரணமாக மற்றும் வருமான ஈட்டத்திற்கான கவனம் செலுத்தப்படாத காரணத்தினால் மீளாய்வாண்டில் 04 சந்தர்ப்பங்களில் ரூபா 480,000 ஆன வருமானத்தினை மாத்திரம் ஈட்டிக் கொள்ளப்பட்டிருந்தது. | கேட்போர் கூடத்தின் பாவனைக் குறைவினால் வருமானம் குறைவடைந்துள்ளதாயும் மற்றும் கட்டணத்தினை மீளாய்வு செய்து அளவினை பெரிதுபடுத்துவதன் மூலம் வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதென அறியத் தரப்பட்டுள்ளது. | வகையில் பாவனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | 2015 வருடம் ரூபா 16,000,000 செலவிடப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்ட நிலையத்தின விடுமுறை உல்லாச விடுதியிலிருந்து மீளாய்வாண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட வருமானம் ரூபா 244,000 ஆனதுடன் அதற்கான விளம்பரத்தினை மேம்படுத்தி விடுமுறை விடுதியின் வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கொரோனா தொற்றுநோய் காரணமாக வருமானம் குறைந்துள்ளதாகவும் எதிர்காலத்தில் அதனை பாவனையினை மேம்படுத்துவதன் மூம் வருமானத்தினை அதிகரித்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத் தரப்பட்டுள்ளது. | சொத:துக்கள் பயன்தரும் வகையில் பயன்படுத்தப்பட்டு வருமானம் ஈட்டிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாட்டு ஆதனங்கள், சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்தவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 1999 வருடம் ரூபா 2,368,359 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிகளைக் கொண்ட மகாவலி கட்டிட நிலப்பகுதி மற்றும் அதற்குரிய காவற்கூடம் 2002 வருடம் முதல் எதற்கும் பிரயோசனப்படுத்தப்படாது வீணடிக்கப்பட்டுள்ளது. | பூ வளர்க்கும் கூட்டுறவு சங்கத்திற்குரித்தான விற்பனை நிலையமொன்றை நடாத்துவதற்காக குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சொத்துக்கள் பயன்தரு வகையில் பாவனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |